

# வையாளி- 6

# பிரிவுபசார மலர்

உயர்தர மாணவர் ஒன்றியம்

தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி

(தேசிய பாடசாலை)

2023






# வையாளி - 6

## பிரிவுபசார மலர்

**உயர்தர மாணவர் ஒன்றியம்**

**தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி**

**(தேசிய பாடசாலை)**

**2023**

## MOTTO

Education, Discipline, Purity

**மகுடவாசகம்**

கல்வி, ஒழுக்கம், தூய்மை

## VISION

Competent citizens who cope with the erudite world.

**நோக்கு**

அறிவு மிகுந்த உலகிற்கு ஈடு கொடுக்கத்தக்க தேர்ச்சி மிக்க பிரஜைகள்.

## MISSION

To create knowledge, skilful, disciplined and honest students by providing ameliorated learning opportunities through an analysis of the experiences of the past present and the challenges of the future.

**பணி - களத்தில் நடப்பது**

கடந்தகால, நிகழ்கால அனுபவங்களுடன் வருங் காலத்தின் சவால்களை ஆராய்ந்தறிந்து மேம்பட்ட கற்றற் சந்தர்ப்பங்களை வழங்குவதன் மூலம் அறிவும், திறனும், ஒழுக்கமும் உள்ள மாணவர்களை உருவாக்கிக் கொடுத்தல்.

# தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி
# கல்லூரி கீதம்

உவர்மலை கல்லூரி விவேகானந்தா வாழ்க!
ஊதா வெள்ளைக் கொடி நிமிர்ந்தாட
உவர்மலை மக்கள் உவந்தளித்தனராம்
உயரிய செயலால் உளம் நிறைந்தனராம்

ஒளியருள் கோணேசர் மலைமுடியில்- எங்கள்
எழில் தவழ் உவர்மலை கலை வடிவில்
கிளி மொழி தமிழ் எங்கும் வழிந்தோட – அதன்
கிருபையில் நாட்களும் கழிந்தோட

கங்கா ஜமுனா காவேரி சிந்து
கற்பவரிடையே படை நான்கும்
எங்கள் திறமைகள் துலங்கிடுமே
அதன் இனிமையில் பணிகளைத் தொடங்குவோமே

உலகின் சிகரம் கல்வியென்போம் - அதன்
உண்மையை உணர்வோம் உயர்வடைவோம்
கலைகள் பலவும் வளர்த்திடுவோம் - என்றும்
கற்றதை மற்றவர்க் குணர்த்திடுவோம்.

**இயற்றியவர் : திருமலைக்கவிராயர்**

# SCHOOL DETAILS – 2023

| | |
|---|---|
| Name of school | : T/Orr's Hill Vivekananda College |
| Address | : Orr's Hill, Trincomalee |
| Type of School | : 1 AB |
| School Was started | : 1978.02.10 |
| School I.D No | : 1701008 |
| Examination No | : 29124 |
| School Census No | : 16058 |
| Province | : Eastern |
| District | : Trincomalee |
| Zone | : Trincomalee |
| Divisional Education office | : Trincomalee |
| Divisional Secretary | : TrincomaleeTown & Gravets |
| Postal No | : 31000 |
| Election No | : 14 |
| Grama Seva Division No | : 244/P |
| School Phone No | : 026-2222761 |
| School E-mail Address | : t.o.vivekananda@gamil.com |
| School Website | : ovctrinco.schweb.lk |
| youtubeAddress | : https://youtube.com/@TTORRSHILLVIVEKANANDA |
| Facilities fees No | : 0002366019 |
| School Development EC A/C No | : 0075722179 |
| Hostel A/C No | : 71429377 |
| School Hostel was started on | : 2010.11.01 |
| G.C.E O/L was started on | : 1984.01.01 |
| G.C.E A/L Arts was started on | : 1991.05.01 |
| G.C.E A/L Commerce was started on | : 1992.05.01 |
| G.C.E A/L Bio/Maths was started on | : 1994.04.15 |
| G.C.E A/L E.Tech/B.Tech was started on | : 2017.01.01 |

# ஆசியுரை



தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரியின் உயர்தரவகுப்பு மாணவர்களால் வருடாந்தம் வெளியிடப்படும் வையாளி - 6 சஞ்சிகைக்கு ஆசியுரை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

2022 ஆம் ஆண்டில் கல்வி கற்ற மாணவர்கள் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி மற்றும் அசாதாரண நிலை காரணமாக 2023 இல் பரீட்சை எழுதவேண்டியேற்பட்டதால் வையாளி-5 2023ம் ஆண்டின் தை மாதத்தில் வெளிவந்தது. இருப்பினும் தற்போதைய சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு இவ்வாண்டிலேயே வையாளி-6 சஞ்சிகையும் வெளிவருகிறது. எதிர்வரும் காலங்களில் சரியான காலத்தில் வெளியிடக்கூடியதாக அமையும் என எதிர்பார்க்கின்றேன்.

இச்சஞ்சிகையின் நோக்கம் வருடாந்தம் பாடசாலையிலிருந்து வெளியேறும் உயர்தர மாணவர்களின் விபரங்களை பதிவுசெய்வது அதேபோல் இக்காலப்பகுதியில் இடம்பெறும் நிகழ்வுகள், வெற்றிச்சாதனைகள், அபிவிருத்திகள் மற்றும் பாடசாலைத்தரவுகள் என்பவற்றை உள்ளடக்கிய ஆவணமாக்கல் என்பதாகும். எதிர்காலத்தில் தகவல்களைத் தேடும்போது இதிலிருந்து விடயங்களை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

இச்சஞ்சிகையை ஆக்கத்திற்கு உதவிய பகுதிதலைவர் திருமதி.S.சுபாஸ் அவர்களுக்கும் சஞ்சிகைக்குழுவிற்கும் மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இவ்வருடத்துடன் நான் ஓய்வு பெறுவதுடன் 2024 ஜனவரி மாதத்துடன் திரு.M.பிரகாஸ் பிரதி அதிபர் அவர்களிடம் கல்லூரியை ஒப்படைக்க உள்ளேன். இவ்வருடம் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் அனைவரும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பாடசாலைக்கும், குடும்பத்திற்கும், சமூகத்திற்கும் முன்மாதிரியாக திகழுவதுடன் எதிர்காலத்தில் நல்லொழுக்க நற்பண்புகளுடன் உயர்நிலை பெற்று சிறப்பாக வாழ வேண்டும் என மனம் நிறைந்த ஆசிகளை மாணவர்களுக்கு தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு.க.ரவிதாஸ்**
**அதிபர்,**
**தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி**
**(தேசிய பாடசாலை)**

**23.11.2023**

## வாழ்த்துச் செய்தி



கிழக்கு மண்ணின் வரலாற்றில் தனக்கான ஒரு இடத்தை தடம்பதித்து தன்னகரில்லா தலைவர்களை தரணி எல்லாம் தலைநிமிரச்செய்வதில் தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி தனித்துவமான இடத்தை வகிக்கின்றது. இக்கல்லூரியிலிருந்து வருடாந்தம் வெளியாகும் ‘‘வையாளி’’ எனும் நூலானது உயர்தர மாணவர்களால் ஆக்கப்படுகின்ற படைப்புகளை அகத்தே கொண்டு வெளிவருவது அவர்தம் அறிவாற்றல்களுக்கு சான்றுகோலாய் அமைகின்றது.இந்நூல் வாசகர்களின் மனதில் தூண்டலை ஏற்படுத்துவதோடு படைப்போனின் எண்ணத்தை மிளிரச்செய்வதாகவும் அமைகின்றது.

அதுமாத்திரமின்றி கல்லூரியின் சாதனைகளையும் வெளிப்படுத்தும் பெறுபேறுகளையும் ஆசிரியர்களின் ஆக்கங்களையும் கொண்டுள்ளது. இந்நூலானது உயர் அடையாளமாக விளங்குவதற்கு முன்னின்று வழிகாட்டியவர் முதல்வர் திரு.க.ரவிதாஸ் ஐயா அவர்களாவார். அவருக்கு இணையாக அவரின் வழிகாட்டலின் கீழ் கல்லூரியின் பிரதி அதிபர், உதவி அதிபர்கள், பகுதித்தலைவர்கள் மற்றும் ஆசிரியர்கள் உறுதுணையாக நின்றுள்ளனர்.

இப்பாடசாலையின் உயர்விற்கு அயராது உழைத்த அனைவருக்கும் நன்றிகளையும் வாழ்த்துகளையும் தெரிவிப்பதோடு இந்நூல் சிறந்த முறையில் வெளிவர வாழ்த்துகளையும் நல்லாசிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு.ம.பிரகாஷ்**
**பிரதி அதிபர்**
**தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி**

## வாழ்த்துச் செய்தி



விவேகானந்தா எனும் திருநாமத்தைக் கொண்டு விளங்கும் எமது கல்லூரியின் க.பொ.த உயர்தரப் பிரிவு மாணவர்களால் வருடம் தோறும் வையாளி என்ற மலர் வெளியிடப்பட்டு வருகின்றது. இம்மலரிற்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் நானும் பெருமிதம் கொள்கிறேன்.

க.பொ.த உயர்தரப்பிரிவு மாணவர்கள் தமது கல்லூரி நாட்களை மீட்டுப் பார்க்கும் ஓர் சிறந்த ஆவணமாகவும் அவர்களின் ஞாபகச் சின்னமாகவும், மட்டுமல்லாது, தமது ஆசிரியர்களுக்கு நன்றிக் கடனை செலுத்துகின்ற வகையிலும் இம்மலர் அமைந்து விளங்குகின்றது. குறித்த வருடத்தில் பாடசாலையில் நடைபெற்ற சகல செயற்பாடுகளையும் திரட்டித் தரும் நல்ல பொக்கிஷம்.

பதின்மூன்று வருட பாடசாலைக்கல்வியை செவ்வனே முடித்துக் கொண்டு பொதுப்பரீட்சையை எதிர்நோக்கி காத்துநிற்கும் எமது மாணவச் செல்வங்களுக்கு என்றென்றும் இறைவனின் நல்லாசிகளை வேண்டுவதுடன், அவர்கள் எடுத்துக் கொண்ட இடையறாத பயிற்சிகளும் முழுமுயற்சிகளும் கைகொடுக்கவும் இறைவன் துணை நிற்க வாழ்த்துகிறேன்.

எமது கல்லூரித்தாய் மேலும் பல சாதனையாளர்களையும் சிறந்த படைப்பாளிகளையும் உருவாக்கித் தருவதோடு, ஆளுமை மிக்க நல்லொழுக்கம் கொண்ட எதிர்கால சமூகத்தை கட்டியெழுப்பி தனக்கென தனியிடம் பெற்று மிளிர வேண்டும்.

**திருமதி.சு.கோகுலதாசன்**
**உதவி அதிபர்**
**தி / உவர்மலை விவேகானந்தா கல்லூரி**

## வாழ்த்துச் செய்தி



எமது பாடசாலையானது இற்றைக்கு 45 வருடங்களைக் கடந்து கல்விப்பணி ஆற்றி வருகின்றது. மாணவர்களின் தனித்திறன்களை இனங்கண்டு அவர்களை ஊக்குவிப்பதில் எமது பாடசாலை என்றுமே பின்னிற்பதில்லை. அந்த வகையில் உயர்தர மாணவர் ஒன்றியத்தால் வருடாந்தம் வெளியிடப்படும் இப்பிரிவுபசார மலரிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

இச்சிறப்பு மலரானது பாடசாலை பற்றிய பல்வேறு தகவல்களையும் ஆசிரியர் மாணவரது ஆக்கங்கள் பலவற்றையும் தாங்கி குறுகிய காலத்திற்குள் வெளிவருவது மிகவும் பெருமைக்குரிய விடயமாகும். கல்வியானது ஒருவனை சிறந்த பண்பாளனாகவும் ஒழுக்கசீலனாகவும் மாற்றி சவால் நிறைந்த உலகில் சரித்திரம் படைக்க வைக்கின்றது. அந்தவகையில் இப்பாடசாலையானது சகல துறைகளிலும் மென்மேலும் சாதனைபடைக்க வேண்டுமென இறைவனை வேண்டி இம்மலரானது நறுமணம் கமழ முன்னின்று உழைத்த உயர்தரப்பிரிவு ஆசிரியர்கள், மாணவர்கள, பகுதித்தலைவர்கள் ஆகியோருக்கும் இதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த அதிபர், பிரதி, உதவி அதிபர்களுக்கும் பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்வதுடன் இவ்வருடம் உயர்தர பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் அனைவரும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று சாதனை படைக்க வேண்டுமென வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற"

**திருமதி.த.விஷ்ணுகுமார்**
**உதவி அதிபர்**
**தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி**

# வையாளி சஞ்சிகை ஆக்கக் குழு

- ❖ **தலைமை** : திரு.க.ரவிதாஸ் (அதிபர்)
- ❖ **இணைத்தலைமை** : திரு.M.பிரகாஷ் (பிரதி அதிபர்)
- ❖ **பொறுப்பாசிரியர்** : திருமதி.S.சுபாஸ் (பகுதித்தலைவர்)
- ❖ **இதழாசிரியர்** : செல்வி. சி.கம்சிகா
- ❖ **சஞ்சிகை குழு** :
    - செல்வி. ரா.ஹர்சா
    - செல்வி. சு.சுவேகா
    - செல்வன். பா.கரீஸ்மன்
    - செல்வன். ம.கமலகேசன்



# உள்ளடக்கம்


1. எமது கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வுகள் 2023
2. இணைப்பாடவிதான சாதனையாளர்களின் விபரங்கள்
3. 2022 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதியான மாணவர்களின் விபரம்
4. 2023 இல் க.பொ.த உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் விபரம்
5. க.பொ.த உயர்தரபிரிவு மாணவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்கள் விபரம்
6. ஆசானே..
7. ஆசைகளில் என் இலட்சியப் பாதை
8. இதயம் கனக்கின்றது
9. கசங்கும் மொட்டுக்கள்
10. கானல் நீர்போல்…
11. நட்பு
12. மீள முடியாத நினைவுகளில்…
13. முயற்சி எனும் பாதைகளில்
14. உயர்கல்வி வாய்ப்புகள்
15. மானுடம் செய்வோம் வாரீர்
16. Latest Technologies Trends
17. பாடசாலை நிகழ்வுகளின் புகைப்படங்கள்
18. நன்றி நவிலல்

## எமது கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வுகள்

- 2022ம் ஆண்டுக்கான உயர்தர மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா.
- 45வது கல்லூரி தினம் கொண்டாடப்பட்டது.
- மாணவர்தலைவர் சின்னம் சூட்டும் நிகழ்வு இடம்பெற்றது.
- 4வது Tech day தொழினுட்பபிரிவு வளாகத்தில் கொண்டாடப்பட்டது
- St.John's ambulance படையணி தெரிவு.
- ஆரம்பப் பிரிவு வளாகத்தில் புதிய மதில் நிர்மாணிக்கப்பட்டது.
- 7வது திருமலை சாரணிய மாணவர்களின் வெளிக்கள பயணத்தில் சாரணபயிற்சி இடம்பெற்றது.
- இந்தியாவின் கடற்படைக்கு சொந்தமான INS Khanjar(P47) கப்பலை எமது ஆசிரியர் குழாத்தினர் பார்வையிட்டனர்.
- சாரணர் விருது விழா இடம்பெற்றது.
- 70 மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்வதற்கான வாய்ப்பு வரலாற்று சாதனையை படைத்துள்ளது.
- ஆரம்ப பிரிவு விவேக அரும்பு - 2 வெளியீடு.
- எமது பாடசாலையைச் சேர்ந்த மூன்று புதிய அதிபர் SLPS(III) வரவேற்பு நிகழ்வு.
- தேசியமட்ட சாதனை புரிந்த தெற்காசிய விளையாட்டு சிலம்ப வீரர்களை வரவேற்பு.
- தேசியமட்ட தமிழ்மொழித்தின தனிநடன வெற்றியீட்டிய மாணவியின் வரவேற்பு.
- STEAM நிகழ்ச்சி திட்டத்தித்தில் உயர்தரமாணவர்கள் கலந்து கொண்டமை.

## பாடசாலை அபிவிருத்தி செயற்பாடுகள்

- ஒன்று கூடல் இடத்திற்கான மேடை அமைக்கப்பட்டது.
- ஆசிரியர்களுக்கான 25 மேசைகள் செய்யப்பட்டன.
- 300 மாணவர் கதிரை, மேசை திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.
- கணணி அறை திருத்தவேலை நடைபெற்றது.
- புத்தாக்க ஆய்வுகூட உருவாக்கம்.
- CCTV கட்டமைப்பு மீள் உருவாக்கம்.
- பாடசாலை கட்டிடங்களுக்கான Wifi Connection ஏற்படுத்தப்பட்டது.
- ஆரம்பபிரிவிற்கான Smart board வழங்கப்பட்டது.
- பாடசாலைக்கான You tube channel உருவாக்கப்பட்டது.
- பாடசாலைக்கான புதிய இணையத்தளம் உருவாக்கப்பட்டது.

# இணைப்பாடவிதான செயற்பாடுகள் - 2022

| No | Competition | Name Of Students | Grade | Event | Level and Place | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Divisional | Zonal | District | Provincial | National |
| 1 | English Day | S.Harikeshan | 13 | Dictation | 2 | 2 | 1 | | |
| 2 | Compertition | K.Tharangani | 13 | Oratory Impromptu | 3 | | | | |
| 3 | | S.Harikeshan | 13 | Oratory Impromptu | 1 | 1 | 1 | | |
| 4 | | T.Dilushiya | 12 | Cursive script | 2 | | | | |
| 5 | | S.Nitharshan | 11C | Dictation | 3 | | | | |
| 6 | | T.Kamshana | 11B | Dictation | 2 | 1 | 1 | | |
| 7 | | K.Lakshini | 10D | Print script | 3 | | | | |
| 8 | | S.Mathushan | 10B | Print script | 2 | 1 | 3 | | |
| 9 | | T.Yuktha | 13 | Dictation | 2 | 2 | | | |
| 10 | | G.T.D.Athiparan | 8A | Recitation | 2 | 2 | | | |
| 11 | | K.Ayshman | 5A | Recitation | 1 | | | | |
| | | Group | | Drama | | 3 | | | |
| 12 | | Group | | Singing(6-9) | 2 | 3 | | | |
| 13 | Sports | A.G.Bivinth | 10B | Karata | | | | | 3 |
| 14 | | T.Yuktha | 9C | Weight Lifting | | | | | 2 |
| 15 | | K.Saranika | 9C | Weight Lifting | | | | | 2 |
| 16 | | Group | 10,11 | Chess | | 1 | | | 3 |
| 17 | | Group | 12,13 | Chess | | 1 | | | 3 |
| 18 | | Group | 11 | Carrom | | 1 | | | 1 |
| 19 | | Group | 12,13 | Carrom | | 1 | | | 1 |
| 20 | | T.Thanubavan | 13 | 400m | | 3 | | | |
| 21 | | P.Hariharan | 13 | 200m | | 3 | | | |
| 22 | | P.Hariharan | 13 | 1500m | | 3 | | | |
| 23 | | G.Dilujan | 12 | 800m | | 1 | | | |
| 24 | | G.Dilujan | 12 | 1500m | | 1 | | | |
| 25 | | Group | 8,9 | 4X100m | | 2 | | | |
| 26 | | R,Jayavathanan | 10 | 200m | | 2 | | | |
| 27 | | R,Jayavathanan | 10 | 400m | | 3 | | | |
| 28 | | M.Pavakeshan | 7 | 80m | | 1 | | | |
| 29 | | M.Pavakeshan | 7 | 100m | | 1 | | | |
| 30 | | V.Kobinesh | 6 | 60m | | 1 | | | |
| 31 | | V.Kobinesh | 6 | 100m | | 2 | | | |
| | | v.Sangeeth | 12 | Badminton | | 1 | | 1 | |
| 32 | | Group | 12,13 | Badminton | | 2 | | 2 | |
| 33 | Art | I.J.Joel | 11 | Art | | | 1 | | 3 |

| No | Competition | Name Of Students | Grade | Event | Level and Place | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | **Divisional** | **Zonal** | **District** | **Provincial** | **National** |
| 34 | தமிழ் தினப் போட்டி | S.Pavithra | 11 | Dance(Single) | | 2 | | | |
| 35 | | R.Kobika | 12 | கவிதையாக்கம் | | 3 | | | |
| 36 | | S.Sowmiya | 12 | Dance(Single) | | 2 | | | |
| 37 | | T.Kamshana | 11 | சிறுகதையாக்கம் | | 1 | | | |
| 38 | | S.Thanushika | 12 | இலக்கணப்போட்டி | | 1 | | | |
| 39 | Science Quiz | N.Banusha | 6 | | 2 | | | | |
| 40 | | P.Varshana | 6 | | 3 | 3 | | | |
| 41 | | V.Sajith Sagara | 7 | | 1 | 3 | | | |
| 42 | | S.Habishan | 7 | Science Quiz | 3 | 1 | | | |
| 43 | | T.Thenusha | 7 | | 3 | | | | |
| 44 | | A.Piraween | 8 | | 1 | | | | |
| 45 | | G.R.Deon Athiparan | 8 | | 1 | | | | |
| 46 | | A.Roshen | 11 | | 2 | | | | |
| 47 | Agriculture quiz | R.Nirojan | 11 | Agri Quiz | | 2 | | | |
| 48 | | M.Danushkanth | 12 | Agri Quiz | | 3 | | | |
| 49 | | Y.Tharshika | 12 | Agri Quiz | | 3 | | | |
| 50 | A/L Quiz | Group | 13 | Science Quiz | | | 3 | | |
| 51 | Do You Know Quiz | Group | 13 | SFT Quiz | | 1 | | | |
| 52 | | Group | 12 | SFT Quiz | | 2 | | | |
| 53 | Innovation | T.Yogikanth | 11 | Innovation competitions | | 1 | | 1 | |
| 54 | | J.Shobanan | 11 | | | 3 | | | |

# இணைப்பாடவிதான செயற்பாடுகள் - 2023

| Competition | Name Of Students | Grade/ Group | Event | Level And Place | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | Divisional | Zonal | District | Provincial | National | International |
| English Day | T.Yuktha | 10 C | Oratory(Prepared) | 2 | 2 | 1 | 3 | | |
| Sports | Group | u-17 | Carrom(Boys) | | 2 | | 3 | | |
| | Group | u-20 | Carrom(Boys) | | 1 | | 1 | | |
| தமிழ் தினப்போட்டி | R.Yathushika | *Gp* -04 | Dance(Single) | | 1 | 1 | 1 | 2 | |
| | N.Sharmi | *Gp* -03 | Dance(Single) | | 1 | 1 | 2 | | |
| | P.Thilakshika | *Gp* -01 | ஆக்கம் | 1 | 1 | 1 | 1 | | |
| Science Olimpiad | N.Banusha | 7 | Science Quiz | | 2 | | Merit | | |
| 2nd WUSF South Asian Championship | V.Lukeshiyan | | Silambam | | | | | | Medal |
| | S.Kopika | | | | | | | | Medal |
| | U.Pavikash | | | | | | | | Medal |
| | S.Subeetshagan | | | | | | | | Medal |
| | S.Santhosh | | | | | | | | Medal |
| | R.Samdavid | | | | | | | | Medal |
| Provincial Robot and Innovation competition | S.Subeetshagan | | Innovation | | | | 3 | | |
| | V.Harun | | | | | | Merit | | |
| | R.Govarthanan | | | | | | Merit | | |
| | T.Jojikanth | | | | | | Merit | | |
| | T.Saseenthan | | | | | | Merit | | |
| அழகியல் போட்டி | Group | Open | Music | | | | 1 | 2 | |
| | N.Sathushana | Senior | Music | | | | 1 | 3 | |
| | Group | Senior | Music | | | | 1 | 3 | |
| | R.Yathushika | | Solo dance | | | | 1 | 2 | |
| | Group | | Dance | | | | 1 | 2 | |

# School Academic Staffs - 2023

| S.No | Name | S.No | Name |
|---|---|---|---|
| 01. | Mr. K .Ravithas | 41 | Mrs. M. Sivanesan |
| 02. | Mr. M. Pragash | 42 | Mrs. M.Anantha Manokaran |
| 03. | Mrs. S. Kokuladasan | 43 | Mrs.T.Nikethan |
| 04. | Mrs. T. Vishnucumar | 44 | Mrs.G.Sutharshini |
| 05. | Mr. V. Mohanarajah | 45 | Mr.S.Thillainathan |
| 06. | Mr. V. Sunthararajan | 46 | Mr. A.M. Mujahith |
| 07. | Mrs. V. Gangatharan | 47 | Mrs. A. Nagalingam |
| 08. | Mrs. J. Vijithakumar | 48 | Mrs.V. Thusan |
| 09. | Mr. P. Konalingam | 49 | Mrs. J.Devadas |
| 10. | Mrs. C. Yuvarajkumar | 50 | Mrs. G. Nalinakanthan |
| 11. | Mrs. S. Subani | 51 | Mr. V. Gnanendran |
| 12. | Mrs. P. Baskaranathan | 52 | Mrs. K. Sarishkumar |
| 13. | Mrs. T. Gengatharan | 53 | Mr. Y. Mathankumar |
| 14. | Mrs. R. Thayaparan | 54 | Mr.A.R.Emiltaine |
| 15. | Mrs. A. Logeswaran | | |
| 16. | Mrs. A. Kantharupan | | **Primary Teachers** |
| 17. | Mrs. U. Subagini | 1 | Mrs. S. Karunaharan |
| 18. | Mrs. T. Ashok | 2 | Mrs. S. Sureshkumaran |
| 19. | Mr. S. Thirumaran | 3 | Mrs. V. Srikanthan |
| 20. | Mrs. P. Umamahesan | 4 | Mrs. T. Kaliraja |
| 21. | Mr. S. Sivashankaran | 5 | Mrs. M. Ravindran |
| 22. | Mrs. N. Nanthakumar | 6 | Mrs. M. Rajkumar |
| 23. | Mr. B. Nirmalathasan | 7 | Mrs. S. Nagenthiram |
| 24. | Mr. R. Ketheeswaran | 8 | Mrs. S. Anantharajan |
| 25. | Mr. S. Baskaran | 9 | Mrs. P. Kamalanathan |
| 26. | Mr. S. Mathan | 10 | Mrs. T. Vignesh |
| 27. | Mr. R. Mithunan | 11 | Mrs. K. Ramachandran |
| 28. | Mr. K. Satheeskumar | 12 | Mrs. Marystella Joel Gibson |
| 29. | Mrs. T. Ranjanan | 13 | Mr. V. Jeyaseelan |
| 30. | Mrs. R. Jeyakanthan | 14 | Mrs. S. Nawaskaran |
| 31. | Mrs. K. Jeyabalini | 15 | Mrs. N. Anuskanth |
| 32. | Mrs. V. P. Birunthuja | | **Development officers** |
| 33. | Mrs.S. Baheerathy | 1 | Mrs. V.R.F. Marina |
| 34. | Mrs. S. Subas | 2 | Mrs. T. Prashanthan |
| 35. | Mrs. D. Srikanthan | | |
| 36. | Mrs. K. Vijayakumar | | **VOLUNTEER TEACHERS** |
| 37. | Mr. T. Rajkamal | 1 | Mr. C. Rohanaprashanth |
| 38. | Mrs. S. Thushyanthan | 2 | Mr. V. Thuwaragan |
| 39. | Mr. N. Jeyapragash | 3 | Miss. G. Joysile |
| 40. | Mr. K. Sivakalithas | 4 | Mr. K. Sathurshan |

# 2023ஆம் ஆண்டில் உயர்தரத்தில் கல்வி கற்ற மாணவர்களின் விபரம்

**பொறியியல்தொழினுட்பபிரிவு** (E.Tech)

| மாணவர் பெயர் | தந்தை பெயர் | முகவரி |
|---|---|---|
| சதுசன் | தங்கராசா | 16/2B மத்தியவீதி, உவர்மலை |
| கரீந்திரன் | லோகேந்திரன் | 43 பிள்ளையார் வீதி,செல்வநாயகபுரம் |
| விசாலன் | சிவநேசன் | 31 அன்புவழிபுரம்,திருகோணமலை |
| மயூவக்சன் | இலக்சுமணதாஸ் | 28 லோவர் வீதி,உவர்மலை |
| கீர்த்திகரன் | கயிலைநாதன் | மாவடிச்சேனையூர்,வெருகல், ஈச்சலம்பற்று |
| சிவதீஸ் | திருச்செல்வம் | பெரியவெளி மல்லிகைத்தீவு, மூதூர் |
| கிருத்திகன் | மகேஸ்வரன் | 246/26 அலஸ்தோட்டம், உப்புவெளி |
| பினுஷ்கர் | கமலநாதன் | 36/17 சுமேதகம, கண்டி வீதி |
| விதுஷன் | ஜெயராஜா | 29/14 மத்தியவீதி, உவர்மலை |
| சேஸ்வர் | சொக்கலிங்கம் | மல்லிகைத்தீவு , மூதூர் |
| ஸ்ரீரிஷிகேஷ் | கலியுகவரதன் | 451/36 NC வீதி கேணியடி, 3ம் ஒழுங்கை |
| ஸாகீத்தியன் | ராஜ்குமார் | 158/13 லோவர் வீதி, திருகோணமலை |
| டினுஷான் | அழகேஸ்வரன் | கணேஸ்கார்டன், திருகோணமலை |
| கவிஷாந் | பரமேஸ்வரன் | 140/11 திருச்செல்வம் வீதி,இலிங்கநகர் |
| | | |

**உயிர்முறைமைகள் தொழினுட்ப பிரிவு (B.Tech)**

| மாணவர் பெயர் | தந்தை பெயர் | முகவரி |
|---|---|---|
| கிஷாமெக்டலின் | அமிர்தநாதர் | 15/1 கண்ணகி புரம், உவர்மலை |
| தர்ஷிகா | யோகேஸ்வரன் | இறால்குழி, மூதூர் 07 |
| கிறிஸ்டினா | இந்திரதேவன் | 86 குறிஞ்சி வீதி, வரோதயநகர் |
| தனுஷியா | யோகநாதன் | 180, ஆறாம் வட்டாரம், சாம்பல்தீவு |
| கவிப்பிரிதா | சந்திரன் | ஆலங்கேணி, கிண்ணியா |
| ரஷிகா | ராஜமகேந்திரா | 54/1 நித்தியபுரி, மூன்றாம்கட்டை |
| திருஸாலினி | சந்திரசேகரன் | ஆலங்கேணி 2, கிண்ணியா |
| பிரிதா | கோணலிங்கம் | 122, பிரதானவீதி, வரோதயநகர் |
| டயந்தினி | செல்வம் | 114, தேவாநகர், புளியங்குளம் |
| திவ்யா | நாகராஜன் | கும்புறுப்பிட்டி, நாவற்சோலை |
| கீர்த்தனா | கணேசன் | 289/6, அன்னாசிலத்த இரத்தோட்ட, மாத்தளை |
| டனுஸ்கான் | முரளிதரன் | சின்னக்குளம் பள்ளிக்குடியிருப்பு, தோப்பூர் |
| விதுஸ்ராஜ் | தர்மகுலசிங்கம் | ஆறாம்வட்டாரம், கும்புறுப்பிட்டி |
| பாலசபேசன் | அறிவழகன் | 48/122, விநாயகபுரம், மட்டிகளி |

## கலைப்பிரிவு

| மாணவர் பெயர் | தந்தை பெயர் | முகவரி |
|---|---|---|
| விதுஷன் | சௌந்தர்ராஜன் | 231/14 அம்மன்கோவில்வீதி, லிங்கநகர் |
| தினக்சன் | லிங்கேந்திராசா | 45,7 ஆம் வட்டாரம், சாம்பல்தீவு |
| ரக்ஷிகன் | சுதா | 171/1, முருகன்கோவில்வீதி லிங்கநகர் |
| கரிஷன் | நவச்சந்திரகுமார் | 62/1, பூம்புகார், பாலையூற்று |
| நாகப்பிரியன் | மோகன் | 780 சுவாமிமலை, தம்பலகாமம் |

| | | |
|---|---|---|
| கோபிகா | ரவீந்திரன் | 57,2 ஆம் ஒழுங்கை ஆனந்தபுரி |
| அக்சயா | முரளிதரன் | 882,முருகன்கோவில்வீதி, பாலையூற்று |
| ரக்சிகா | ரஜினிகுமார் | 39/6 ,தேன்தமிழ்வீதி உவர்மலை |
| கம்ஷா | கமலேஸ்வரன் | 332 , முருகன்கோவில் வீதி பாலையூற்று |
| சதுர்ஷனா | நிஷாந்தன் | 23, கண்டிவீதி, லிங்கநகர் |
| கிருஷாலினி | சிவபாலன் | 147, 3 ஆம் ஒழுங்கை ஆனந்தபுரி |
| தக்சிகா | செல்வராஜா | 39/4 தேந்தமிழ்வீதி உவர்மலை |
| ஷோபனா | புஷ்பராஜா | 414, கணேஷ்வீதி, பாலையூற்று |
| நிஷானி | முத்துசாமி | 87 கந்தையாவீதி, வரதயோநகர் |
| ஜனுஷா | மகேந்திரராசா | 225, அன்புவழிபுரம் திருகோணமலை |
| லக்சனா | கிறிஸ்டோபர் | 29 /22 விஹாரைவீதி திருகோணமலை |
| ஜதுர்சிகா | சசிகுமார் | 33/42 சிவபுரி, திருகோணமலை |
| கீர்த்தனா | நிரஞ்சன் | 201/7 முருகன்வீதி லிங்கநகர் |
| யதுர்ஷினி | ஸ்ரீதரன் | 65/42 நகாம்மாள்வீதி, பாலையூற்று |
| யதுர்ஷிகா | ஸ்ரீதரன் | 65/42 நகாம்மாள்வீதி, பாலையூற்று |
| துஷாந்தினி | குபேந்திரன் | 88/15 முருகன்கோவில்வீதி லிங்கநகர் |
| சஞ்சீவினி | குகேந்திரராசா | பாரதிபுரம், தம்பலகாமம் |
| சனுஷியாயினி | சிவபுண்ணியம் | 136 தேவநகர் புளியங்குளம் |
| நிரோஜினி | கோணேஸ்வரன் | 21 கந்தையாவீதி வரதயோனகர் |
| டிலுக்சிகா | கேதீஸ்வரன் | 195/3 முருகன்கோவில்வீதி லிங்கநகர் |
| நிலுஜா | விஜயகுமார் | பாரதிபுரம்,தம்பலகாமம் |
| ஹனுஜா | ஜெயக்குமார் | 80, 8ஆம் வட்டாரம் ஆத்திமோட்டை |
| பிரிந்தியா | குணசீலன் | பொற்கேணி, தம்பலகாமம் |
| சுபலாஷினி | ஹரிஷ்டன் | 19, சமாது வீதி, திருகோணமலை |

## வர்த்தகப்பிரிவு

| மாணவர் பெயர் | தந்தை பெயர் | முகவரி |
|---|---|---|
| தினேஷ் | ஜீவேந்திரன் | 28/7, லோவர்வீதி, உவர்மலை |
| சேஷப்பிரியன் | குசேலன் | 45, கோணேசபுரம், உவர்மலை |
| கிஷோத் | ஜெயதீஸ் | 48/19, கண்டிவீதி, திருகோணமலை |
| பிரவீன் | ரமேஸ்பாபு | 24/24C, கோணேசபுரம், உவர்மலை |
| டிவாஷனன் | விஜயரத்னம் | மல்லிகைத்தீவு, மூதூர் |
| டக்சயன் | பிரகாஷ் | 14, சாம்பல்தீவு, திருகோணமலை |
| கிஷாந்தன் | செல்வராசா | 54, கோப் வீதி, பாலையூற்று |
| சஞ்சய் | சந்திரலிங்கம் | முள்ளிப்பொத்தானை, அலகு-9 |
| ரத்தீஸ் | ஸ்ரீஸ்கந்தராசா | 54, கோப் வீதி, பாலையூற்று |
| சஜெந்தன் | முஹிந்தன் | ஆலங்கேணி-1, கிண்ணியா |
| டிரோன் | தியடோர் | 11/1A, அன்புவழிபுரம், கன்னியாவீதி |
| டில்ஷாந் | சுதர்ஷன் | 616, அன்புவழிபுரம், திருகோணமலை |
| சஜந்தன் | செந்தில்குமரன் | வள்ளுவர் வீதி, கிண்ணியா |
| சந்தோஷ் | சிவராஜா | 27/3, சாம்பல்தீவு, திருகோணமலை |
| சங்கீத் | வாமதேவன் | 21, லிங்கநகர், திருகோணமலை |
| சாருஜன் | கபிரியேல்குமார் | 20, அன்பியம் வீதி, பாலையூற்று |
| அபிநாத் | மோகனதாஸ் | 46 மத்திய வீதி, உவர்மலை |

| | | |
|---|---|---|
| சஞ்சீவ் | சுரேஷ் | 218, மக்கேசர் வீதி, உவர்மலை |
| கிஷான் | தவராஜ் | 36/100, சுமேதகம வீதி |
| டனுஷன் | ரவீந்திரன் | 181, மாதுமை வீதி, தேவாநகர் |
| சாருஜன் | கோணலிங்கம் | 36/64, கண்டி வீதி, சுமேதகம |
| ரம்மியபவன் | தயாபரன் | 111D மக்கேசர் வீதி, உவர்மலை |
| ஆத்மிகன் | மணிவண்ணன் | பொற்கேணி, தம்பலகாமம் |
| யதுஷன் | ஆனந்தன் | 81, மிகுதுபுரம், அநுராதபுரம் |
| யனுஷ்டன் | தனபாலசிங்கம் | மல்லிகைத்தீவு, மூதூர் |
| சேன்மார்க் | சுப்பிரமணியம் | தெலுங்குநகர், தம்பலகாமம் |
| துஷிகரன் | இந்திரராசா | பொற்கேணி, தம்பலகாமம் |
| சஷிகரன் | நல்லையா | புதுக்குடியிருப்பு, தம்பலகாமம் |
| யாதேஷ் | சுரேஸ்குமார் | சாம்பல்தீவு, திருகோணமலை |
| யதுர்ஷன் | கோணேசலிங்கம் | பொற்கேணி, தம்பலகாமம் |
| யதுஷாந் | ஜெயமோகன் | 32/3 மத்தியவீதி, உவர்மலை |
| சாருஜன் | தனேஸ்வரன் | பொற்கேணி, தம்பலகாமம் |
| விஜயதாரணி | கங்காதரன் | 32, மூன்றாம் ஒழுங்கை, கண்ணகிபுரம் |
| சுபோதினி | செந்தில்வேல் | 11/3, அம்பாள் வீதி, அன்புவழிபுரம் |
| தரணியா | சந்திரசேகர் | 24/6, கோணேசபுரம், உவர்மலை |
| சனுஜா | கண்ணதாசன் | 77/2, வெள்ளைமணல், சீனக்குடா |
| கிஷாலினி | ஜெகதீஸ்வரன் | ஆலங்கேணி -1, கிண்ணியா |
| சாலுஜா | உதயகுமார் | ஆலங்கேணி-1, கிண்ணியா |
| திரிஷா | காளிராசா | H06, தானியகம, திருகோணமலை |
| கவித்தாள் | நடேஸ்வரன் | 36/101, சுமேதகம, திருகோணமலை |
| மிதுஷா | சோனசுரேஷ் | 69/10, லவ் வீதி, உப்புவெளி |
| ஜெரூஷா | தேவதாஸ் | 51/1, பூம்புகார் வீதி, பாலையூற்று |
| திரிஷ்டினா | செல்டன் | 14/15, தேவாநகர், புளியங்குளம் |
| பிரன்சினா | சில்வெஸ்டர்யூஜின் | 29/10, யூதாகோவில் வீதி, லிங்கநகர் |
| ஜெபோனா | தேவதாஸ் | 51/1, பூம்புகார் வீதி, பாலையூற்று |
| சதுர்ஷிக்கா | ஜெகதாஸ் | 32/5, உவர்மலை, மத்தியவீதி |
| யுதக்சனா | ஸ்டான்லிரொபட் | 23, அன்னைவேளாங்கன்னிவீதி, பாலையூற்று |
| விதுர்ஷிலா | யோகராஜா | 426, அம்பாள் வீதி, அன்புவழிபுரம் |
| கிரிஷி லக்சானி | சுனில்ரத்ன | 40, கிளிக்குஞ்சுமலை, கன்னியா |
| கேஷா | கணேசபாலன் | 184, காந்திநகர், அன்புவழிபுரம் |

## கணிதப்பிரிவு

| மாணவர் பெயர் | தந்தை பெயர் | முகவரி |
|---|---|---|
| சித்தார்த் | கிருஷ்ணகுமார் | 204/3 லோவர்வீதி, உவர்மலை |
| முபினேஸ் | பாலகிருஷ்ணன் | 16/11 மத்தியவீதி, உவர்மலை |
| விதுர்ஜன் | விநாயகமூர்த்தி | 53/5 லிங்கநகர் |
| சதுஷன் | சுப்ரமணியம் | 143/6 கடற்கரைவீதி, பாலையூற்று |
| ருட்சிபவன் | காளிராஜா | 36/9 சுமேதகம, கண்டி வீதி |
| டிஜிர்த்தனன் | ஜெயசீலன் | 21 B மத்தியவீதி, உவர்மலை |
| சூர்யா | ராஜாராம் | 134 கடற்கரை வீதி |
| ராம்சரண் | சுரேஷ்குமரன் | 22 C லோவர்வீதி, உவர்மலை |

| | | |
|---|---|---|
| அன்பொளி | வமதேவன் | சேனையூர் 05,மூதூர் |
| டர்சன் | சந்திரகுமார் | 17/12 அன்புவழிபுரம் |
| தனுசன் | ஆனந்தராஜா | 71 வரோதயநகர் |
| தூயவன் | தேவராஜ் | 726 அன்புவழிபுரம் |
| ஜதுர்ஷன் | சுந்தரலிங்கம் | ஆலங்கேணி, கிண்ணியா |
| பிரதீஷன் | சசிகுமார் | மேன்காமம், கிளிவெட்டி, மூதூர் |
| பிரநீதன் | நவநீதன் | 4 ஆம் வீதி, பெரியகுளம், நிலாவெளி |
| யதுர்ஷாந் | குணாலன் | 451/21 கேணியடி |
| தாருகேஷன் | வசந்தகுமார் | 6 ஆம் வீதி, பெரியகுளம் |
| தனுஜன் | மனோகரன் | 1104 9 ஆம் காலணி, முள்ளிப்பொத்தானை |
| தமயந்திதர்ஷா | திஸ்ஸ | 31/9 கண்ணகிபுரம், உவர்மலை |
| ஆன் ஸார்த்திக்கா | இலங்கோ | 92/2 மத்தியவீதி, உவர்மலை |
| தர்ஷிகா | திருமேனிராசா | 84/12 CTB வீதி, உவர்மலை |
| ராகவி | பிரதீபன் | 48/115 ராஜவரோதய சதுக்கம் |
| கோபிகா | கெங்காதரன் | 974/A அம்பாள் வீதி |
| நிவேதிகா | மதன் | 234/2 கந்தளாய் |

**உயிரியல்பிரிவு**

| மாணவர் பெயர் | தந்தை பெயர் | முகவரி |
|---|---|---|
| ஜெருசன் | நாகரட்ணம் | 20, காந்திநகர்,திருகோணமலை |
| அக்சயன் | மகேஸ்வரன் | A1, டானியல்நகர், திருகோணமலை |
| தனுஷிகன் | உதயசீலன் | 42, 4 ஆம் ஒழுங்கை,உவர்மலை |
| அனோஜ் | தெய்வேந்திரன் | 28, மத்தியவீதி, உவர்மலை |
| விக்னேஸ் | வாசுதேவன் | 859, ஜாமியா வீதி, பாலையூற்று |
| கோவாணன் | சசிதரன் | 06, கும்புறுபிட்டி, திருகோணமலை |
| பிரதீஷன் | நவநீதன் | பெரியகுளம், 4 ஆம் ஒழுங்கை நிலாவெளி |
| சஞ்சய் | சுந்தரலிங்கம் | பிரிவு9, முள்ளிப்பொத்தானை |
| தமிழ்குமரன் | இளஞ்செழியன் | கங்குவேலி, தெஹிவத்த, மூதூர் |
| தர்ஷன் | ரஞ்சுதன் | லோவர் வீதி, உவர்மலை |
| பிரனுஷன் | ரவீந்திரன் | வட்டாரஇலக்கம் 04, சாம்பல்தீவு |
| பிரகஷ்வி | ஜெயாபரன் | 454, அன்புவழிபுரம், திருகோணமலை |
| நிவேதிகா | உதயலிங்கம் | 20/2F, மத்தியவீதி உவர்மலை |
| ஆன்டிலிஷியா | ஜெயராஜ்குமார் | 98/2A, மத்தியவீதி, உவர்மலை |
| பவ்யா | நாகசோதி | 74, கோணேசபுரம், உவர்மலை |
| கிஷாயினி | கோகுலராஜ் | 24/2B, கோணேசபுரம் , உவர்மலை |
| போஷிகா | பாலசுப்ரமணியம் | 422, அம்பாள் வீதி , அன்புவழிபுரம் . |
| துட்ஷாயினி | இரட்ணசிங்கம் | 25/11B, லிங்கநகர் , திருகோணமலை . |
| கம்ஷாயினி | கமலேஸ்வரன் | 101, குறிஞ்சி வீதி , வரோதயநகர் . |
| பிரித்திகா | சுந்தரலிங்கம் | வர்ணமேடு , தம்பலகாமம் , திருகோணமலை . |
| தர்மிகா | மணிவண்ணன் | 18, தெட்ஷணாபுரம், கன்னியா |
| பவதாரணி | லோகநாதன் | 272/18 புதுக்குடியிருப்பு, வரதோயநகர் |
| கவினயா | சிவதீபன் | கோபாலபுரம், நிலாவெளி |
| தனுஜா | நந்தகுமார் | 84/3, 14 வது ஒழுங்கை லிங்கநகர் |
| கிஷோனிதா | சிவகரன் | 1021 பாலையூற்று, திருகோணமலை |
| அக்சேயா | நந்தகுமார் | 256/11B உள்துறைமுகவீதி லிங்கநகர் |
| சதுர்ஸ்கா | செல்வகுமார் | கடகரைசேனை-01, மூதூர் |
| சஞ்சுபப்பிரியா | கோகிலரஞ்சன் | கூனித்தீவு -08, மூதூர் |
| டிலோஜிகா | சுதாகர் | சம்பூர் - 05, மூதூர் |

# Eligible students for University entrance in G.C.EA/L 2022

Stream: Biological science

| No | Name | G.C.E A/L Results | District Rank |
|---|---|---|---|
| 1 | Mathivannan Inthujan | 3A | 7 |
| 2 | Kuleswaran Tharushan | 2AB | 15 |
| 3 | Mariyathas Rushanth | A2B | 30 |
| 4 | Lakshana Thurenthiran | 2AB | 33 |
| 5 | Sundaramoorthy Harikeshan | ABC | 83 |
| 6 | Nadeshan Amsavithan | 2BC | 86 |
| 7 | Ravinthiran Rishivan | B2C | 118 |
| 8 | Elmojeyakumar Sathushan | 3C | 146 |
| 9 | Kishobika Pojarasa | 3C | 161 |
| 10 | Tamilselvan vinushanth | 2CS | 253 |
| 11 | Hamshitha Ilamuruganathan | 2CS | 257 |
| 12 | Vijayakumar Dinukshan | 2CS | 264 |
| 13 | Atputharatha Deron | 2CS | 282 |

Stream: Physical science

| No | Name | G.C.E A/L Results | District Rank |
|---|---|---|---|
| 1 | Vigneshwaran Nidharshan | 3A | 2 |
| 2 | Vignesh Divigsharan | 2BC | 42 |
| 3 | Jeyarasa Jeyaprasanna | 2BC | 54 |
| 4 | Pathmaraj Gowshihan | A2C | 58 |
| 5 | Pushparasa Thusithan | B2C | 65 |
| 6 | Sriranjan Kirushajithan | 3C | 103 |
| 7 | Pathmarajah Sharoon | 2CS | 115 |
| 8 | Pushpaharan Keaithaaran | C2S | 168 |
| 9 | Thiruchiloganananda Neveram | C2S | 188 |

Stream: Commerce

| No | Name | G.C.E A/L Results | District Rank |
|---|---|---|---|
| 1 | Komika Lingeswaaran | 3A | 12 |
| 2 | Nixson Shanthosh | 2AB | 32 |
| 3 | Kumanan Thavappriyan | 3A | 33 |
| 4 | Keerthana Thadchamoorthy | 2AB | 73 |
| 5 | Lithiya Abinu Suthakaran | 2AC | 75 |
| 6 | Shathurshana Ravindran | A2B | 76 |
| 7 | Amirthalingam Vithurshanan | A2B | 82 |
| 8 | Suwetha Ranjithdayasiri | A2B | 91 |
| 9 | Thanusha Uthayathas | A2B | 99 |
| 10 | Thaluksha Kirupugaleeshwaran | 2AC | 115 |
| 11 | Rajendran Simiyon | A2C | 134 |
| 12 | Hexibha Devaraj | A2C | 155 |
| 13 | Mohanadas Prasanna | B2C | 159 |
| 14 | Jeyaseelan Mahiban | B2C | 161 |
| 15 | venusaraniya Thiruchelvan | B2C | 169 |
| 16 | Thulasshalini Suthakaran | 2BC | 175 |
| 17 | Nithusha Srikanthan | 2BC | 179 |
| 18 | Kithurshiya Siritharan | B2C | 180 |

Stream: Bio System Technology

| No | Name | G.C.E A/L Results | District Rank |
|---|---|---|---|
| 1 | Anushika Manogaran | ABC | 5 |
| 2 | Thayaparan Pavithira | 2BC | 14 |
| 3 | Pathmanathan Shanukshi | 2BC | 18 |
| 4 | Atputharasa Thavarukshan | 3C | 22 |
| 5 | Suthakaran Mirarththan | 3C | 24 |
| 6 | Tharshika Tharmarasa | 3C | 25 |

Stream: Engineering Technology

| No | Name | G.C.E A/L Results | District Rank |
|---|---|---|---|
| 1 | Prabaharan Arwinth | ACS | 17 |
| 2 | Ketheeswaran Gohethan | B2C | 21 |
| 3 | Kanagasundram Vithushan | BCS | 22 |
| 4 | Mathichelvan Kanushan | 3C | 26 |
| 5 | Srishankar Sathushan | 2CS | 47 |
| 6 | Yasotharan Vithushan | 2CS | 48 |

Stream: Arts

| No | Name | G.C.E A/L Results | District Rank |
|---|---|---|---|
| 1 | RASATHURAI JANANIKKA | 3A | 11 |
| 2 | THANGAROOPAN DILAKSHA | 3A | 28 |
| 3 | SIVAKUMAR THANUSIKKA | 3A | 59 |
| 4 | SIVAKUMAR KRISHIKA | A2B | 226 |
| 5 | THAMILMOHAN KITHURSHIKA | A2B | 274 |
| 6 | MANOGARAN ANUSHIYA | 2AB | 285 |
| 7 | UTHAYAKUMAR SANTHASHINI | ABC | 496 |
| 8 | KEPERALINGAM NERUKANTH | ABC | 506 |
| 9 | KUNASEGARAM MITHUSHAYINI | 2BC | 511 |

# 2023 க.பொ.த உயர்தர பிரிவு மாணவர்களிற்கு கற்பித்த ஆசிரியர்கள்

| NO | Name | Subject |
|---|---|---|
| 1 | Mr.V.Sunthararajan | Tamil |
| 2 | Mrs.T.Gangatharan | Geography |
| 3 | Mrs.A.Nagalingam | Music |
| 4 | Mrs.K.Sarishkumar | Dance |
| 5 | Mr.T.Rajkamal | Drama |
| 6 | Mrs.s.Thushiyanthan | Hindu culture |
| 7 | Mrs.V.R.F. Marina | Christianity |
| 8 | Mr.S.Sivashankaran | Agro Technology |
| 9 | Mr.P.Konalingam | Accounts |
| 10 | Mr.Y.MathanKumar | Accounts |
| 11 | Mrs.A.Kantharupan | Economics |
| 12 | Mr.v.Mohanrajah | Business Study |
| 13 | Mrs.S.Baskaran | Business Study |
| 14 | Mrs.S.Bahirathy | ICT |
| 15 | Mr.A.R.Emiltaine | ICT |
| 16 | Mrs.P.Umamahesan | Agriculture |
| 17 | Mr.S.Sivashankaran | Biosytem Technology |
| 18 | Mr.A.Mujahith | Engineering Technology |
| 19 | Mrs.S.Subas | Science For Technology |
| 20 | Mrs. K.Jeyabalini | Biology |
| 21 | Mr.B.Nirmalathasan | Chemistry |
| 22 | Mrs.P.Baskaranathan | Chemistry |
| 23 | Mr.A.Gnanendran | Combined maths |
| 24 | Mr.R.Ketheeswaran | Physics |
| 25 | Mr.C.Deogupillai | English |
| 26 | Mrs.R.Jeyakanthan | English |
| 27 | Mrs.T.Ranjanan | English |
| 28 | Rev.sr.Eugene Barthelot | English |

# ஆசானே!

மழலை மொழி பேசி
மாணவர் எனும் பெயரோடு வந்த எம்மை
மறு தாயாய் வளர்த்து வரும்
மாண்புமிகு ஆசான்களே வாழ்க!
அழுது நானும் அடம் பிடித்த போதிலும்
அறிவை ஊட்ட மறுக்காது
அரவைணத்து அன்பு பணி புரியும்
நல் ஆசான்களே!
மாணவர் மனம் எனும் களர் நிலத்தை
பண்படுத்தி விளைவிக்கும் உழவர்களே!
ஏட்டுக்கல்வியோடு நல் ஒழுக்கம்
போதிக்கும் ஞானியரே!
வருங்கால சமுதாயத் தூண்களை
பாங்காய் செதுக்கும் நல் சிற்பியரே!
அனைத்து பிள்ளைகளும் என் பிள்ளை என்றெண்ணி
அன்போடு அறிவை போதிக்கும் களங்கமிலா கலைஞர்களே!
சேவைதனை சிறப்பென செய்து வரும்
சிந்தனையாளர்களே!
எப்படி நாம் புகழ்ந்திடுவோம் உம் அர்ப்பணிப்பு வாழ்வுதனை!
தாய் இன்றி சேய் இல்லை
உம் பணிக்கு வணங்காத ஆள் இல்லை
உம்மை வாழ்த்த வார்த்தைகள் இல்லை
நன்றி கூறி முடித்துக் கொள்ள
எனக்கிங்கு மனமில்லை.

**சு. சுவேக்கா**
**2024 கலைப்பிரிவு**

# ஆசைகளில் என் இலட்சிய பாதை....

வானில் பறக்க ஆசை எனக்கு
ஓர் இழையின் பிடியில் இருக்கும் பட்டங்களை போல் அல்ல
சுதந்திரமாக அலையும் மேகக்கூட்டங்களைப் போல்
நிலையே நிலை மாறலாம் நிரந்தரமோ என்றும் மாறாது..

கனவுகளில் வாழ ஆசை எனக்கு
விழி மூடும் போது தோன்றும் அலட்சிய கனவுகளில் அல்ல
விழித்திருந்து காத்திருக்கும் என் இலட்சிய கனவுகளில் -அறிவை
உடைமையாக்கிய என் ஆசானின் கூற்றிற்கிணங்க..

கண்ணீரில் வாழ ஆசை எனக்கு
சோதனைகளில் ஏற்படும் கவலைக் கண்ணீரில் அல்ல எனது
சாதனைகளால் நான் சிந்தப்போகும் ஆனந்தக் கண்ணீரில்
சிந்தும் கண்ணீரில் சிதறிய துளிகளாய் எனது கவலைகள்..

விதை விதைப்பதற்கு ஆசை எனக்கு
நிலத்தில் விதைக்கும் பல் பன்ன விதைகளை அல்ல -பிறர்
நெஞ்சில் விதைக்கும் நல் எண்ண விதைகளை
என் விழியையே நான் இழக்க நேரினும் விதையிட மறவேன்..

காலங்களை மாற்ற ஆசை எனக்கு
வாடை காலத்தை வசந்த காலமாக அல்ல
நான் வாழ்ந்த காலத்தை பிறர் மனதில் வரைந்த காலமாக
காலமே மாறினும் என் கனவுகள் அழிவதில்லை...

பயணம் செய்ய பாதை நீ தராமல் போனால் என்ன
சோராமல் போரிடுவேன்.. எந்நாளுமே ஓயாமலே -என்
இலட்சிய பாதையை நான் தொடர்வேன்....

**லோ.ஷனோத்**
**12 உயிரியல் பிரிவு**

# இதயம் கனக்கிறது...

ஆணிவேராய் நீ இருந்தாய்
அன்பு மழை என்மேல் பொழிந்தாய்
ஆசையுடன் அரவணைத்தாய்
அறிவுதனை நிறைவாய் தந்தாய்

பாசத்தால் பலவாறு அழைத்தாய்
நல்ல பல பகிடிகளைச் சொன்னாய்
வளர்ந்தவளாய் நான் இருந்தும்
வதனமதில் முத்தமிட்டாய்

கல்லூரியில் கற்றிட கவனமாய்
கரம் அதை தந்தாய்
கடைசி நேரம் பிரிவு எனும் துயர் தந்து
சொல்லாமலே சொர்க்கம் சென்றாய்

கரமதை தந்த நீ – என்னை
காணாமலே கரைந்திட்டாய்
இதயம் கனக்கிறது
இன்னும் ஒரு முறை
உன்னைக் காண வேண்டும் என்று....அப்பா!

**ர.கோசனா**

**2024 கலைப்பிரிவு**

## கசங்கும் மொட்டுக்கள்...

விஞ்ஞான வளர்ச்சியிலே
விண்ணைத் தொட்டு விட்ட மனிதன்
பண்பாட்டில் மட்டும் கீழ்மட்ட நிலையில் ஏனோ?
காருண்யம் பற்றி
கதை கதையாய் புலம்புபவன்
காமவெறி கொண்டு அலைவது ஏனோ?
பச்சிளம் குழந்தையின்
மழலை கண்டு மகிழ்ச்சியுறாது
பசிக்கு இரையாக்குவது ஏனோ?
அவள் அழகை
இரசிப்பதை விட்டு
ஆபாசமாக்குவது ஏனோ?
அழகுப் பேச்சை
வர்ணிப்பதை விட்டு
அழுகுரல் கேட்பது ஏனோ?
பாதுகாப்பாய் இருந்திடாமல்
பாதையிலும் பயத்துடன்
நடந்திட வைப்பது ஏனோ?
அரவணைத்திட வேண்டிய கைகள்
அச்சமின்றி அவளின்
ஆடை அவிழ்க்க நினைப்பது ஏனோ?
மலர்ந்திட வேண்டிய மொட்டுக்கள்
அரும்பும் முன்னமே
கசக்கி பிடுங்கி எறியப்படுவது ஏனோ?
"ஏன்?' என்ற விடை தெரியா கேள்விகள்
வேரூன்றிக் காத்திருக்கின்றன,
கசங்கும் மொட்டுக்களோ இன்னும்
கசக்கப் பட்டுக் கொண்டு தான் இருக்கின்றன...

**சு. துர்ஷா**
**2024 வர்த்தகப்பிரிவு**

# கானல் நீர் போல்...

அழுவதை கேட்கவும் ஆறுதல் அளிக்கவும்
அடைக்கலம் கொடுக்கவும் ஆட்களே இல்லை
அணைக்கவும் கரமின்றி அலைபாயும் எமக்கு
ஆலயம் அங்கிலும் ஆண்டவனே இல்லை

அத்திவாரமின்றி கட்டப்பட்ட ஆடிவிடும் வீடுகளாய்
அல்லி, அம்புயம் மலர்கள் போல் ஆணைக்கு
அடிபணியும் நிலையில் அவலமாய் அலைமோதும்
அநாதைகள் நாம், அடிமைகளாயும் இங்கே...

தாயின் மடியில் தவழ்ந்த நினைவில்லை
தந்தை நிழல் நம்மை தழுவியதில்லை
தாய் மண்ணில் வாழ்வதற்கே புரிந்திடுவர்
தயவுள்ளம் கொண்டோர் தானங்கள் தாம்

பாதுகாப்பு ஏதுமின்றி பயத்துடன் வாழ்வுதனை
பக்குவமாய் கடத்திட பதற்றத்துடன் நாம்,
பாரமனைத்தும் எம்மை பலவான் ஆக்கிவிட
பரிவால் பசி போக்கும் பாமரர்கள்...

ஏழ்மைக்கோலம் எமை இரப்பவர் ஆக்கியது
எம் அழுகுரல் எமை யாசகர் ஆக்கியது
எவருமில்லை ஆதரிக்க எம் அருகில்
எஞ்சியதோ, ஏந்திட வந்திட்ட தனிமை தான்...

காகித ஓடம் கடலலை மீது தடுமாறி நின்று,
கரைசேர வழியின்றி கசங்கி மடிவது போல்
கதறியழ வாயின்றி காத்துக்கிடக்கும் சிறார்நாம்
காணும் கனவுகளெல்லாம் கானல் நீர் போல்...

**சி. கம்ஷிகா**
**2024 தொழிநுட்ப பிரிவு**

# நட்பு

மழலைப் பருவத்தில் பார்த்து வியக்க ஒரு நட்பு..

குழந்தைப் பருவத்தில் ஓடி விளையாட ஒரு நட்பு....

காளைப் பருவத்தில் ஊர்சுற்ற ஒரு நட்பு..

வாலிபப் பருவத்தில் பேசி ரசிக்க ஒரு நட்பு...

முதிர்ந்தபின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு நட்பு...

நட்புகள் ஆயிரம் இருந்தும் நட்பின் தேவை குறையவில்லை..

தேவையின் போது தோள்களில் சாய நட்பு வேண்டும்...

துன்பத்தின் போது கண்ணீர் துடைக்க நட்பு வேண்டும்...

மகிழ்ச்சியின் போது மனம் மகிழ நட்பு வேண்டும்...

நானாக நானிருக்க நட்பே... நீ எனக்கு நட்பாக வேண்டும்.....

**க.முகுந்துஜன்**

**2024 உயிரியல் பிரிவு**

**Past discoveries are being taught.**

**Future discoveries depend on continuous own effort of students.**

**கற்பித்தவை கண்டுபிடிக்கப்பட்டவை.**

**கண்டுபிடிக்கப்போவது தொடர்ச்சியான மாணவரின் சுயதேடலினாலேதான்.**

# மீள முடியா நினைவுகளில்....

கண்கள் குளமாகும்....
கல்லூரி நாட்களை நினைக்கையிலே
அனுபவங்களின் படிப்பினை
அவை தரும் பிடிப்பினை
சோம்பலின் முடிவு
நண்பனின் பரிவு

சோர்விலும் உற்சாகம் ஆனால்
உற்சாகத்தில் துளி இல்லை சோர்வு
மூன்று மாதம் கொண்டாட்டம்
மூன்று மணி நேரம் முழுப்பாடமும் மனப்பாடம்

தேர்வும் தேர்தலும் ஒன்றுதான்
ஆனால் முடிவில்
தேர்ச்சியும் தோல்வியும் சமம் தான்
எங்களுக்கு

முதல் மேசைக்கு சொந்தக்காரருக்கு
முழுப்பாடமும் அத்துப்படி
கடைசி மேசைக்கு சொந்தக்காரருக்கு
வாழ்க்கைப் பாடம் அத்துப்படி

மீண்டும் ஒருமுறையேனும் கிடைக்குமா
மீள முடியா நினைவுகளில்
வாழ்ந்த நாட்கள்....

**சு.தீபிகா**
**2024 கணிதப்பிரிவு**

# நினைவுகள் திரும்பாதா?

இரண்டாம் முறை பிறந்தேன்
கல்லூரி வாயிலில் நுழைகையில்...
கனவுகளில் தெரிந்த சொர்க்கத்தை
கண்களில் பார்த்து வியந்தேன்

இனமத வேற்றுமை இன்றி
உயர்வுதாழ்வு பேதமின்றி
சீருடையில் ஒருமித்து
அனுபவித்த உல்லாசம்

சிறகடித்து பறந்த காலம்
மதிமயங்கி தெளிந்த காலம்
பள்ளிக்கு வந்த பின்னும்
குழந்தையாய் திரிந்த காலம்

துன்பம் சூழ்ந்த வேளையும்
சிரிக்கச் செய்யும் நண்பர்கள்
சிரித்துப் போக்கும் நேரத்தில்
சிந்தனை தூண்டும் ஆசான்கள்

வீணாய் கிறுக்கிய போதும்
வெறுத்து விடாத கரும்பலகை
எவ்வளவு சேதம் செய்தும்
பொறுத்துக் கொள்ளும் மேசைகள்

இடைவேளை இரண்டு இருந்தும்
இடையிடையே சிற்றுண்டி
மூட்டை கட்டி வந்த கதைகளை
அவிழ்த்து விடும் தருணங்கள்

பயமின்றி எழுதிய தேர்வுகளில்
படிக்காமல் தேர்ச்சியுற்ற அனுபவம்
தோல்விகளையும் துணிவுடன்
ஏற்றுக்கொண்ட ஞாபகம்

என் கண்முன்னே வந்து செல்லவே
விழி வழியே நீர்த்துளிகள்
எட்டிப்பார்த்து வினவுகின்றன- என்
"பள்ளி நினைவுகள் திரும்பாதா?" என்று...

**ம.கிருத்திகன்**
**2023 எந்திரவியல் தொழிநுட்ப பிரிவு**

# முயற்சி எனும் பாதைகள்

காலை ஒன்பது மணியளவில் எங்கள் சுற்றுலாவின் இறுதி நாளான அன்று யாழ்ப்பாண இராமநாதன் இசைக்கல்லூரியை சுற்றிப் பார்க்க சென்றிருந்தோம். அங்கு சென்றதும் புராதன இசைக்கருவிகளையும் புகழ்பெற்ற வாத்தியக்காரர்களையும் சுவர் படங்களில் பார்த்தோம். அங்குள்ள வகுப்பறைகளுக்குள் உள் நுழைகையில் பல மாணவர்களைக் கண்டோம். அங்கு சற்று வித்தியாசமான, கால்களை சமமாக வைக்க முடியாத நிலையில் கதிரை மேல் நடுக்கமாகவும் அமைதியாகவும் இருக்கும் முல்லைக்கொடி எனும் மாற்றுத்திறனாளியை பார்த்தோம். சிறிது நேரம் அமர்ந்திருந்த முல்லை எங்கள் அனைவரது வருகையினையும் பார்த்து எங்களுக்காக ஒரு நிகழ்ச்சியை ஆயத்தப்படுத்தினாள். நரம்பு வாத்தியமான வீணை எனும் வாத்தியத்தில் பாடலும் சுருதியுமான அருமையான இசையை வாசித்துக்கொண்டு ஆழ்மனதை வருடிவிட்டாள்.

வீணையின் நரம்புகள் முன்னே அவள் நடுக்கம் ஓடி ஒளிந்தது. அவளின் கைவிரல்கள் நடனமாட தொடங்கிவிட்டன. இறுதியில் இனிமையான இசையை எங்கள் முன்னிலையில் வெளிப்படுத்தினாள். நாங்கள் அவளின் அருகில் சென்று நன்றி கூறுகையில் எங்களுக்கு ஆச்சரியம் காணப்பட்டது. அவர் யாழ்ப்பாண இராமநாதன் நுண்கலைப் பீடத்தில் வீணை பாடத்தினை மையமாகக் கற்று பி.ஏ. எஃப் என்ற உயர்ந்த பட்டத்தினைப் பெற்ற பயிற்றுவிப்பாளர் ஆவார். இதைப் பார்த்ததிலேயே பாதி நேரம் போக்காட்டி விட்டோம். பார்வை நேரம் முடிவடைந்தது.

திரும்பிப் போகும் வழி எல்லாம் என் மனதில் பல எண்ணங்கள். இசையுலகிற்கு வீணைக்கருவி ஒரு அரசியாக இருந்த போதும் என் கண் முன்னே முல்லை ஆசிரியர் முடி சூடா அரசியாக மகுடம் சூடினாள். அவள் வெற்றிக்கொடி பார் முழுவதும் இசையால் ஈடு செய்து விட்டாள். தக்கவற்றை தகர்த்தெறிந்து, தடைகளை மிதித்தெறிந்து வெற்றி எனும் விளிம்பில் கவலைகளை கடந்து கலைகளைக் கற்றுக் கொண்டால் வெற்றி எனும் பயணத்தில் முயற்சி எனும் பாதைகள் கடினமானவை ஆனால் முடிவுகள் இனிமையானவை, இதைக் கண்டதில் இருந்து...

**ச. கபிசியா**
**2024 கலைப்பிரிவு**

# உயர்கல்வி வாய்ப்புக்கள்

கல்வி என்பது ஒரு சக்திவாய்ந்த ஆயுதமாகும், இதன் மூலம் நாடுகள் சர்வதேசப் பொருளாதாரத்தில் மேலாதிக்கத்தைப் பெற முடிவதுடன் தமது குடிமக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தக் கூடியதாகவும் உள்ளது. இலங்கையில் முறையான கல்வியின் ஆரம்ப வடிவம் 6 ஆம் நூற்றாண்டில் இருந்து ஆரம்பமானது. 1940 களில் கல்வி அமைச்சர் டாக்டர். சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா இலங்கையின் கல்வி முறையில் விரிவான சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தி அனைத்து மாணவர்களுக்கும் கல்வியை இலவசமாக்கினார். இன்று, தீவு முழுவதும் 10,150 க்கும் மேற்பட்ட பாடசாலைகள் பரந்து விரிந்து கிடக்கின்றன. இலங்கையில் 92% க்கும் அதிகமான கல்வியறிவு விகிதம் காணப்படுவதுடன், முழு ஆசியாவிலும் கல்வி வளமிக்க நாடாக திகழ்கின்றது.

இலங்கையில் மூன்றாம் நிலைக் கல்வி என்பது பல்கலைக்கழகம், தொழிற்கல்வி கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளை உள்ளடக்கியது. பாடசாலை கல்விக்கு பின்பு, இலங்கையில் உள்ள மாணவர்கள் பொறியியல், கலை, வணிகம், மருத்துவம் மற்றும் தொழில்நுட்பம் ஆகிய கற்கை நெறிகளை உயர்கல்வியில் இலவசமாக கற்க முடியும், இருப்பினும் பொதுப் பல்கலைக்கழக நுழைவுக்கான வாய்ப்பு குறைவாகவே உள்ளது.

மாணவர்கள் க.பொ.த உயர்தரத்தில் தேர்ச்சி பெற்றிருந்தால் மாத்திரமே பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிக்க முடியும், மேலும் அரச பல்கலைக்கழகங்கள் இருந்தாலும், நுழைவுக்கான வாய்ப்பு மிகவும் குறைவாகவே உள்ளது. தொழிற்கல்வி அல்லது தொழில்நுட்பக் கல்லூரி வாய்ப்புக்கள் மற்றும் தொழிற்பயிற்சிகள் க.பொ.த. உயர் தரம் கற்ற மாணவர்களுக்கு மட்டுமே கிடைக்கும்.

இலங்கையில், உயர்கல்வியை பயில விரும்புகின்ற மாணவர்கள் தேசியக் கல்விக் கல்லூரிகளில் பாடநெறிகளில் கலந்துகொள்ளலாம் அல்லது தொழில்நுட்பக் கல்லூரியினால் வழங்கப்படும் இரண்டு வருட தொழிற்பயிற்சித் திட்டத்தை முடிக்கலாம். இந்த வாய்ப்பு க.பொ.த உயர் தரம் கற்ற அனைத்து மாணவர்களுக்கும் திறந்திருக்கும்.

பல்கலைக்கழகத்தில், மருத்துவம் அல்லது கட்டிடக்கலை போன்ற படிப்புகள் 6 ஆண்டுகள் நீடிக்கும் என்பதால், ஒரு மாணவர் பாடத்தைப் பொறுத்து 3 அல்லது 4 ஆண்டுகளில் இளங்கலைப் பட்டம் பெறலாம். மாணவர்கள் முதுகலைப் பட்டம் பெற

இன்னும் இரண்டு ஆண்டுகள் படிக்க வேண்டும், மேலும் முனைவர் பட்டம் பெற வேண்டுமானால் அதற்கு மேல் கூடுதலாக 3 முதல் 5 ஆண்டுகள் படிக்க வேண்டும்.

இலங்கையின் பல்கலைக்கழக சேர்க்கை செயல்முறை மிகவும் போட்டித்தன்மை வாய்ந்தது. வருடந்தோறும் சராசரியாக க.பொ.த உயர்தரப் பரீட்சையில் 60 வீதமான மாணவர்கள் சித்தியடைகின்றனர். இவர்களில் சுமார் 15 சதவீதம் பேர் மட்டுமே பல்கலைக்கழகத்துக்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

மாணவர்களின் உயர்தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் தரப்படுத்தப்பட்ட மதிப்பெண் முறையின்படி தரவரிசைப்படுத்தப்பட்டு பல்கலைக்கழகத்துக்கு அனுமதிக்கப்படுகின்றனர். இலங்கையில் பல்கலைக்கழகத்திற்குச் செல்லும் சில மாணவர்களுக்கு, உயர்கல்வி அமைச்சு பல்வேறு புலமைப்பரிசில் வாய்ப்புகளை வழங்குகிறது. சமீபத்தில் கல்வி அமைச்சு “லேப்டாப் கடன் திட்டத்தை” நடைமுறைப்படுத்தியது.

Times Higher Education World University இன் 2023 ஆம் ஆண்டுக்கான தரவரிசைப்படி இலங்கையில் உள்ள கொழும்பு மற்றும் பேராதனை பல்கலைக்கழகங்கள் உலக பல்கலைக்கழக தரவரிசையில் 1,001 முதல் 1,200 இடங்களுக்குள் இடம்பிடித்திருக்கின்றது. எவ்வாறெனினும் அண்மைக்காலத்தில் பொதுப் பல்கலைக்கழகங்களின் திறன் பற்றாக்குறையைக் கருத்தில் கொண்டு, இலங்கையில் தனியார் உயர்கல்வி வழங்குநர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. மேலும் தற்போதைய அரசு அதிகளவான மாணவர்களுக்கு உயர்கல்வி வாய்ப்புக்களை வழங்கும் முகமாக 2024 ஆம் ஆண்டளவில் தனியார் பல்கலைக்கழகங்களை உருவாக்குவதற்கான அனுமதியினை வழங்கியுள்ளது.

இன்று இலங்கையில் உள்ள மிகப் பெரிய பிரச்சினை, அதன் படித்த மக்களுக்கு அர்த்தமுள்ள வேலைகளைத் தேடுவதுதான். படிக்காதவர்களை விட படித்தவர்களுக்கு வேலை கிடைப்பதில் பெரும் சிக்கல் நிலை காணப்படுகின்றது. பட்டதாரிகளிடையே வேலையின்மை சதவீதம் அண்ணளவாக 30 சதவீதமாக காணப்படுகின்றது.

திரு.ம.பிரகாஸ் (SLPS)
B.B.A, P.G.D.E, P.G.D.E.M, MEd(Mgt)®
பிரதி அதிபர்,
தி/உவர்லை விவேகானந்தா கல்லூரி

## மானுடம் செய்வோம் வாரீர்....

ஏழாமறிவென்று ஏதேதோ உளறினாலும்
ஆறாமறிவைத் தொலைத்து
அவதிப்படுகிறான் மனிதன்

மாறாத மாற்றத்தால்
மாறிக்கொண்டே போகுமுலகில்
மனிதமும் மாறி
புனிதம் கெட்டுப் புல்லென்றாகின்றதே....

விபத்தில் சிக்கிய
வீதியோரத்து நாயாய்....
சிதிலமாய்ச் சிதைந்து கிடக்கிறது மனிதம்

படைப்பினுயர் தன்மையால்
பரவசப்பட்ட மனிதன்
பாசநேச வாழ்வுமிழந்து
பரம்பொருளையும் மறந்தே போனான்

பொருள்தான் ஆதாரமென்று- இறை
அருள்தனைப் பெறமறந்து
மருளுக்குள் சிக்கி
மனிதம் தொலைத்து
மண்ணக வாழ்வின் மகத்துவம்
மறந்தே போனான்... ஆதலால்
மானுடம் செய்வோம் வாரீர்....

**வே. சுந்தரராஜன் (MA(Tamil))**

**ஆசிரியர்**

**தி/உவர்லை விவேகானந்தா கல்லூரி**

# Latest Technologies Trends

| Technologies | Carriers |
|---|---|
| ➢ Artificial Intelligence | Machine Learning Engineer<br>Data Scientist<br>Computer Vision Engineer<br>Business intelligence Developer<br>Data Analyst |
| ➢ Data Science | Data Scientist<br>Data Architect<br>Data engineer<br>Data Analyst<br>Business Analyst |
| ➢ Internet of Things | IoT Software Developer<br>System Design Manager<br>IoT Research Developer<br>IoT solution Architect |
| ➢ Block chain | Block chain Developer<br>Block chain Quality Engineer |
| ➢ Robotic Process Automation | RPA Developer<br>RPA Consultant<br>RPA Project Manager<br>RPA Business Analyst |
| ➢ Virtual Reality | AR and VR Content Writers<br>Product Management<br>UI and UX Design |
| ➢ Edge Computing | |
| ➢ Intelligent apps | |

- Technology is constantly updating at such a rapid pace that it seems it is might be faster than light! Learn about the top hottest skills to learn to get a job
- Get your hands on Practical Projects and get job assistance with top firms in future.

**Mrs.S.Subas (B.Sc., PGDE (Merit))**
**Sectional Head (Technology)**
**T/Orr's Hill Vivekananda College**

# நன்றி நவிலல்

பள்ளிக்காலம் எனும் பசுமையான நினைவுகளை, கண்ணீர் மல்க அகம் நிறுத்தி, மீள முடியா நினைவலைகளில் ஊசலாடி, கல்வி எனும் சமுத்திரத்தில் முத்தெடுக்க முயற்சி எனும் படகேறி வெற்றி எனும் கரைசேரக் காத்திருக்கும் இளம் சாதனையாளர்களின் பிரியாவிடை நிகழ்வில் ''வையாளி - 6'' எனும் தொடர் சஞ்சிகையை செதுக்கி வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

''நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக'' வளர்ச்சியும் உயர்ச்சியும் கண்டுவரும் எமது கல்லூரியின் வெற்றித்தடமே வையாளி என்பதில் பெருமைகொள்கின்றேன். கல்வியிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் சாதனைகள் குவித்திடும் எமது மாணவர்களின் சரித்திரங்கள் ஆவணமாக்கப்பட வேண்டியது அவசியமாகும். இதன் ஒரு பகுதியாக ''வையாளி'' திகழ்கின்றது.

''வையாளி - 6'' எனும் இந்த சஞ்சிகைக்கு வித்திட்ட எமது கல்லூரியின் முதல்வர் திரு.க.ரவிதாஸ் அவர்களுக்கு ''வையாளி - 6'' இதழாசிரியர் என்ற வகையில் முதற்கண் நன்றியைக் கூறிக்கொள்கின்றேன்.

''வையாளி - 6'' என்ற சஞ்சிகை பிறப்பதற்கு உதவிகளையும் முழுப்பங்களிப்பினையும் ஆலோசனைகளையும் வழங்கிய கல்லூரியின் மதிப்பிற்குரிய அதிபர், பிரதி அதிபர், உதவி அதிபர்கள் மற்றும் ஆக்கங்களை வழங்கிய மாணவர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சஞ்சிகையை தொகுத்து தட்டச்சிட்டு முழுவடிவம் கொடுத்த ஆசிரியர் திருமதி.சோபா சுபாஸ் அவர்களுக்கும் அச்சிட்டு வழங்கிய SS DIGITAL'S பதிப்பகத்தினருக்கும் உளம் கனிந்த நன்றியை

நன்றி

இவ்வண்ணம்
சி.கம்ஷிகா
இதழாசிரியர்






SCIENCE LABORATORY




MINISTRY OF EDUCATION
AND
DEPARTMENT OF
NATIONAL MUSEUM
ARE YOU THE
NEXT?
National Science Exposition
Prosperity through Scientific Empowerment...
NATIONAL
SCIENCE
DAY 2023
ARE YOU THE
NEXT?
INFORMATICS
INSTITUTE OF
TECHNOLOGY
www.iit.ac.lk








SS DIGITAL'S 0777 695 636